தேவநீதி

THANKS TO OUR ALMIGHTY GOD. MAY GOD BLESS YOU AND MAY HOLY SPIRIT LEAD YOU

To the Readers

Dear Beloved Brother/Sister, Thank you for downloading this Ebook. Please note that this Ebook is copyrighted by the author of the book or the publisher of the book or as mentioned in the book. Word of God Ministries is just providing you this ebook as free of cost and it is for your personal use not for commercial purposes.

To the Copyright Owners

Dear Copyright owners, Word of God Ministries is doing this Free Ebook service to help the people who are not able to find the printed copy of your book from various countries arround the world and to the people who are restricted to have the printed materials in their house. And this will help the readers to improve their spiritual life.

If you want your new books to be published here as Free Ebook, kindly EMAIL US at wordofgod@wordofgod.in or CALL US at +91 7676505599, +91 9964747708, +91 9964422489

If you feel that your book should not be published, we are KINDLY REQUESTING YOU TO EMAIL US at wordofgod@wordofgod.in or CALL US at +91 7676505599, +91 9964747708, +91 9964422489. We will remove it from our Free Service as early as possible.

About Word of God Ministries

Word of God Ministries was founded in the year 2007, July 29th with the grace and leading of Almighty God by Bro. Yesudas Solomon as an interdenominational ministry. The popular ministry "**Word of God Team**" is one among our various ministries. Now this ministry has 10 branches such as **1)** Word of God Team, **2)** Mobile Ministry, **3)** Internet Ministry, **4)** Deaf Ministry, **5)** Blind Ministry, **6)** Tribal Ministry, **7)** Computer Ministry, **8)** Audio Ministry, **9)** Video Ministry and **10)** Printing Ministry. We all thank our God with full of our heart for using us in His Great Ministry. We need your continuous prayer support. Our vision is to "Reach the Unreached through Technology". Our websites are: www.WordOfGod.in, www.ChristiansMobile.com, www.FreeChristianEbooks.in, www.IndianBibles.net, www.ChristianAudioBooks.in, www.WordOfGodTeam.com, www.WordOfGodMinistry.in, www.KannadaBible.net, www.KannadaChristian.net, www.PrayForKarnataka.com

தேவநீதி

"**முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்" (மத்6:33)** என்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தாம் பூமியில் இருந்த நாட்களில் எடுத்துரைத்தார். நாம் பரலோக இராஜ்ஜியத்தில் (தேவனுடைய இராஜ்ஜியத்தில்) பிரவேசிக்க வேண்டுமானால் அவருடைய நீதியைத்தேடி அதன்படி நடக்க வேண்டும். முதலாவது என்று சொல்லப்படும் பதம் நாம் இப்பொழுது தேடிக்கொண்டு இருக்கிற உடை, உணவு, உறைவிடம், படிப்பு, வேலை, கல்யாணம் முதலிய எல்லாவற்றையும் விட்டு தேவனுடைய இராஜ்ஜியத்தைத் தேடுவதே. அப்பொழுது இவைகள் எல்லாம் கூடக்கொடுக்கப்படும். தேவனுடைய இராஜ்ஜியத்தைக் கண்டடைந்த பிறகு அவருடைய நீதியைத் தேடுங்கள். ஒருவன் மறுபடியும் பிறந்தால் தேவனுடைய இராஜ்ஜியத்தைக் காண்கிறான். மாம்சத்தில் பிறந்த நாம் ஆவியில் (தேவ ஆவியில்) பிறக்க வேண்டும். அப்பொழுது தேவனுடைய இராஜ்ஜியத்தைக் காண்கிறோம். **(யோ3:3).** இப்படியாக ஆவியிலும், ஜலத்திலும் பிறந்தால் தான் தேவனுடைய இராஜ்ஜியத்தில் பிரவேசிக்க முடியும்.

நம் கர்த்தராகிய இயேசுவே அதைச் செய்து காட்டினார். கடவுள் மனிதனாக வந்த போது தனது 30வது வருடத்தில் யோவானால் ஞானஸ்நானம் பெற அவரிடத்தில் சென்றார். இயேசு

கூறியதாவது: "இப்பொழுது எனக்கு இடம் கொடு. (ஞானஸ்நானம்): இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றது என்றார்" **(மத்3:15).** ஜலத்தினால் (முழுக்கு) ஞானஸ்நானம் பெறுவது தேவனுடைய நீதியாகும். அதுவே கீழ்ப்படிதல். நீதியை நிறைவேற்றுதல். நீதி (Right Action) என்பது சரியான செயல் என்று பொருள்படும். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் **(மாற்கு 16:16).**

பாவ மன்னிப்பைப் பெற்று இயேசுவை இருதயத்தில் ஏற்றுக்கொள்ளும் பொழுது மறுபடிப்பிறக்கிறோம். தேவ ஆவியாகிய பரிசுத்த ஆவியானவர் நம் உள்ளத்தில் வந்து வாசம் பண்ணுகிறார். இதுவே ஆத்தும இரட்சிப்பாகும். இயேசுவே நம்மை, புத்திரசுவிகாரத்தின் ஆவியைப் பெற்றவர்களாய், பிதாவின் முன்பாக நிற்க, அப்பா, பிதாவே என்று பிதாவாகிய தேவனை அழைக்கத் தகுதிபடுத்தினார். **(ரோ 8:15)** (Right Standing). ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யும் கிருபையை அடையவும் தைரியமாய் கிருபாசனத்தண்டையில் சேருகிறோம் **(எபி 4:16).**

நமது நீதியாகிய கர்த்தர் "இதோ நாட்கள் வரும் என்று சொல்கிறார். அப்பொழுது தாவீதுக்கு ஒரு நீதியுள்ள கிளையை எழும்பப்பண்ணுவேன். அவர் ராஜாவாய் இருந்து, ஞானமாய் இராஜரிகம் பண்ணி, பூமியிலே நியாயத்தையும், நீதியையும்

நடப்பிப்பார்" **(எரே 23:5,6).** அவர் நாட்களில் யூதா இரட்சிக்கப்படும். இஸ்ரவேல் சுகமாய்த் தங்கும், அவருக்கு இடும் நாமம் நமது நீதியாய் இருக்கிற கர்த்தர் என்பது (The Lord of our righteousness). இயேசுவே நம்முடைய நீதியாய் இருக்கிற கர்த்தர் **(எரேமி 33:16).** அவரே நீதிபரர்; என் தாசனாகிய நீதிபரர், தம்மைப்பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார். அவர்களுடைய அக்கிரமங்களை அவரே சுமந்து கொள்வார் **(ஏசா 53:11).** நீதியின் சூரியன் என்று அழைக்கப்படுகிறார் **(மல் 4:2).**

கர்த்தராகிய இயேசுவை இருதயத்தில் விசுவாசிப்பதே தேவனுடைய நீதியாகும். மனுஷனுடைய நீதி அழுக்கான கந்தையைப் போலிருக்கிறது **(ஏசா 64:6).** இஸ்ரவேலர் தேவநீதியை அறியாமல் தங்கள் சுயநீதியை நிலைநிறுத்த தேடுகிறபடியால் தேவ நீதிக்குக் கீழ்ப் படியாதிருக்கிறார்கள் **(ரோ 10:3).** கர்த்தராகிய இயேசுவை வாயினால் அறிக்கையிட்டு தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார் என்று இருதயத்தில் விசுவாசித்தால் இரட்சிப்பு உண்டாகிறது. நீதியுண்டாக இருதயத்தில் விசு வாசிக்க வேண்டும் **(ரோ 10:9,10).** விசுவாசத்தினாலே தேவ நீதி உண்டாகிறது **(ரோ 1:17).**

"இதோ உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார். அவர் நீதியுள்ளவரும், இரட்சிக்கிறவரும், தாழ்மையுள்ள வரும்,

கழுதையின் மேலும், கழுதை குட்டியாகிய மறியின் மேலும் ஏறிவருகிறார்." **(சகரி 9:9)**. இயேசுவே இரட்சகர். அவர் நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரம் இம்மூன்றையும், மோசநாசத்திலிருந்தும், தீமையிலிருந்தும், வியாதியிலிருந்தும் மற்ற எல்லாவற்றிலிருந்தும் இரட்சிக்க வல்லவராய் இருக்கிறார். பாவத்துக்கு செத்து, நீதிக்கு பிழைத்திருக்கும்படி அவர் தாமே தமது சரீரத்தில் நம்முடைய பாவங்களைச் சிலுவையிலே சுமந்தார் **(Iபேதுரு 2:24)**. அவர் நம்மை நீதியின் பாதைகளில் நடத்துகிறவர் **(சங் 23:3)**.

இந்தப் புதிய உடன்படிக்கையின்படி, இருதயத்தில் வாசம் பண்ணுகிற தேவ ஆவியானவருக்குக் (பரிசுத்த ஆவியானவருக்கு) கீழ்ப்படிந்து அவருடைய நீதியை நடப்பிக்க வேண்டும். தேவ சத்தத்தைக் கேட்கிற அநேகர் உடனே கீழ்ப்படியாதபடி, இது தேவ சத்தமோ அல்லது பிசாசோ என்று சந்தேகப்பட்டு, அவநம்பிக்கையாய், சத்தியத்தை விசுவாசிக்காத படி, (தேவன் பேசுகிற வார்த்தை சத்தியம்) இருக்கும்போது வஞ்சகத்தின் ஆவியை (பிசாசு) தேவன் அவர்களுக்குள் அனுப்புவார் **(II தெச 2:11-12)**. தேவன் பொய் சொல்ல மனிதன் அல்ல. மனம் மாற மனுபுத்திரன் அல்ல **(எண் 23:19)**. சத்தியத்தைப் (உண்மையை) பேசும் போது விசுவாசியாததினால் பொய்யை நம்பப் பண்ணுகிறார். **இது தேவநீதி.**

பயப்படாதே என்று சொல்லியும் (வேதத்தில் இந்தப்பதம் 360 இடத்திற்குமேல் பயன்படுத்தப் பட்டு இருக்கிறது) பயப்படும் பொழுது அந்த பயத்திற்கு தேவன் நம்மை ஒப்புக் கொடுப்பார். **அது தேவநீதி.** யோபுவின் புஸ்தகத்தில் அதைக் காண்கிறோம். பயந்த காரியம் எனக்கு நேரிட்டது. அஞ்சினது எனக்கு வந்தது **(யோபு 3:25)**. யோபு எதைக்குறித்து பயந்தானோ அது அவனுக்கு நேரிட்டது. என் பிள்ளைகள் பாவம் செய்கிறார்கள். தேவனை தூஷிக்கிறார்கள். ஆகவே என் பிள்ளைகள் இறந்து விடுவார்கள் என்று பயந்தான். அது தான் நேரிட்டது. **ஆகவே நீங்கள் வீணாய் பயப்படும் பொழுது பயத்தை விரட்டி அடிக்காமல் அஞ்சிக்கொண்டிருந்தால், எதைக் குறித்து பயப்படுகிறீர்களோ அது உங்களுக்கு நேரிடும். இது தேவநீதி.**

தயவுள்ளவனுக்கு தயவுள்ளவர். உத்தமனுக்கு உத்தமர், புனிதனுக்குப் புனிதர், மாறுபாடுள்ளவனுக்கு மாறுபாடுள்ளவர் **(சங் 18:25-26)**. மாறுபாடுள்ள இருதயத்தை கர்த்தர் அருவருக்கிறார். **(நீதி 3:32)**. ஏன் மாறுபாடு வருகிறது? இருதயம் பொல்லாததும், திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாய் இருக்கிறது **(எரே.17:9)**. உங்கள் மாறுபாடு உங்களைக் கண்டிக்கும் **(எரே2:19)**. நீங்கள் மாறுபாடாய் சிந்திக்கும் பொழுது அவரும் மாறுபாடாய் நடத்துவார். **இதுவும் தேவநீதி.** பிலேயாம் தகுந்த உதாரணம் **(எண் 22 அதிகாரம்)**.

முதன் முறை பிலேயாம் தேவனிடம் விசாரித்த பொழுது தேவன் சொன்ன வார்த்தை (12ஆம் வசனம்) "நீ அவர்களோடு போக வேண்டாம். அந்த ஜனங்களை சபிக்க வேண்டாம்". பின்பு பாலாக் மறுபடியும் அவனிடத்தில் கனவான்களான அதிக பிரபுக்களை அனுப்பி, "உன்னை மிகவும் கனம் பண்ணுவேன். நீ சொல்வதை எல்லாம் செய்வேன். நீ வந்து எனக்காக சபிக்க வேண்டும்" என்று சொன்னான். தேவன் மனம் மாறுவாரோ? தாம் பேசினதைக் குறித்து மனஸ்தாபப் படுவாரோ? (Iசாமு 15:29). இதையறிந்த பிலேயாம் மறுபடியும் விசாரிக்கப் போகிறான். தேவனிடத்தில் இருந்து என்ன கிடைக்கும்? **மாறுபாடுள்ளவனுக்கு மாறுபாடான உத்தரவு.** "நீ போ" என்று சொன்னார். ஆனால் 22 ஆம் வசனத்தில் அவன் போகிறதினாலே தேவனுக்குக் கோபம் மூண்டது. போ என்று சொன்னவருக்கு ஏன் கோபம் வர வேண்டும்? ஆதலால், தேவன் முதலில் பேசினதுதான் நிலைபெறும். அவர் மனம் மாறாதவர். நேற்றும், இன்றும், என்றும் மாறாதவர்.

அநேக விசுவாசிகள் இதை அறிந்து கொள்கிறதில்லை. ஆகவே தான் மாறுபாடானபதில் அவர்களுக்குக் கிடைக்கிறது. **தேவன் உங்கள் மாறுபாட்டுக்கு ஒப்புக் கொடுக்கிறார் (பிசாசு).** இதுவும் தேவநீதி. இருதயத்தைத் திறந்து வைத்து தேவனிடத்தில் ஆலோசனை கேட்க வேண்டும். இருதயத்தில் ஆசை வைத்துக் கொண்டு, மனதை அதில் பதித்து வைத்து விட்டு, ஜெபித்தால் பதில்

கிடைக்காது. உண்மை நிலை அறிய முடியாது. ஆகவே மாறுபாடான பதில் வரும். அநேகர் (90%) இதனால் அவதிப்படுகிறார்கள். லோத்து செழுமையை பார்த்து விட்டு சோதோமுக்குச் சென்றான். கர்த்தரிடத்தில் விசாரிக்கவில்லை. கர்த்தரிடத்தில் விசாரிக்க வேண்டும். கல்யாணகாரியங்களில் அநேகர் தவறுகிறது உண்டு. இதனால் வரும் பாடுகளை கிறஸ்துவின் நிமித்தம் வரும் பாடுகள் என்று கூறிக்கொண்டு தங்களைத் தாங்களே தேற்றிக் கொள்கிறார்கள். (ஏமாற்றிக் கொள்கிறார்கள்). கவனமாக ஜாக்கிரதையுடன் தேவனிடத்தில் விசாரிக்க வேண்டும். தேவ ஆலோசனையை அநேகர் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஏனென்றால் மாம்சத்தால் (கண்களால்) அதைப் பார்க்கிறார்கள். ஆவியில் அறிந்து கொள்வதில்லை. ஆகவே தவறுகள் நேரிடுகிறது.

தேவன் நீதியில் பரிசுத்தராய் விளங்குகிறார். நியாயத்தீர்ப்பில் உயர்ந்து விளங்குகிறார். (ஏசா 5:16). அவருடைய நீதியில் கடுகளவேனும் குறையில்லை. அவர் நீதியில் பரிசுத்தர். ஆகவே தான், தேவ தூதர்கள் அவரை பரிசுத்தர், பரிசுத்தர் என்று ஓயாமல் சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள். தேவனுடைய **நியாய பிரமாணங்களில் தேவநீதி எழுதப்பட்டு இருக்கிறது** (மத் 23:23). நியாயபிரமாணத்தைப் படிக்க வேண்டும். யாத் 20-லிருந்து 23-அதிகாரங்களிலும் தொடர்ந்து லேவியராகமம், எண்ணாகமம், உபாகமம் ஆகிய ஆகமங்களில் பல இடங்களில்

சொல்லப்பட்டும் இருக்கிறது. "வேதத்தை ஆசாரியன் அறிந்து இருக்க வேண்டும். வேதத்தை அவன் வாயிலே தேடுவார்கள்". (மல்2:7). "ஜனங்கள் அறிவில்லாமையால் சங்காரமாகிறார்கள். நீ ஆசாரியன் ஆகாதபடி நான் உன்னை வெறுத்து விடுவேன். நீ, உன் தேவனுடைய வேதத்தை மறந்தாய். ஆகையால் நான் உன் பிள்ளைகளை மறந்து விடுவேன்" (ஓசி4:6).

இன்று நம்முடைய வாழ்க்கை சமாதானம் நிறைந்ததாயும், சுமுகமாய் இல்லாததின் காரணம் கர்த்தருடைய வேதத்தின் அடிப்படையில் வாழ்க்கை அமைக்கப்படவில்லை. மோசேயின் மூலமாய் கொடுக்கப்பட்ட கற்பனைகளும், கட்டளைகளும், நியாயப்பிரமாணங்களும் நிறைந்ததாகிய வேதமே நம்முடைய வாழ்க்கையாகிய வீட்டின் மூல அஸ்திபாரம். வேதத்தின் சட்டதிட்டங்களாகிய ஒவ்வொரு கல்லும் வாழ்க்கையாகிய வீட்டைக் கட்ட பயன்படுத்தப் பட்டிருக்குமானால் மழையினாலும், புயலினாலும் அசைக்கப்படாதிருந்திருக்கும். உலகமே கோணலும் மாறுபாடுமாய் காணப்படுவதின் காரணம் எல்லாரும் நியாயப்பிரமாணத்தைக் கைவிட்டார்கள். கடினம் என்று தள்ளிவிட்டார்கள். நம்முடைய பிதாக்கள் இவ்வேதத்தைக் கைக்கொண்டிருந்தால் இந்த அவலநிலை நமக்கு ஏற்பட்டிருக்காது. மனிதன் தன் சுய இச்சையாய் திரிய விரும்பினான். பெந்தே கோஸ்து மக்களும் (Pente cost) இவ்வேதத்தைப் புரிந்து கொள்ளாதபடி இது

பழைய உடன்படிக்கை என்று தள்ளிவிட்டார்கள். இச்சட்ட திட்டங்களை எல்லாருமே கைக்கொண்டால் தான் எங்குமே ஒழுங்கும், சுபிட்சமும், கலகமில்லாத வாழ்வும், நிம்மதியும் கிடைத்திருக்கும். உலகெங்கும் இயேசு கிறிஸ்து நம்மை நியாயப்பிரமாணத்திலிருந்து விடுதலையாக்கினார் என்று பிரசங்கிக்கிறார்கள். மனம் போன வாழ்வுக்கு வழி வகுக்கிறார்கள். தேவன் தானே, நாம் வாழ்க்கையை எப்படி வாழ வேண்டும், எப்படி அமைத்துக் கொள்ள வேண்டும் என்ற விதிமுறைகளைக் கொடுத்தார். அதையே தான் இப்புதிய உடன்படிக்கையின்படி, நம்மில் வாசமாயிருக்கிற பரிசுத்த ஆவியானவர் போதிக்கிறார். இந்த நியாயப் பிரமாணங்களை மனதிலே வைத்து, இருதயத்திலே எழுதுகிறார். (எபி8:10).

தேவனுடைய கையால் எழுதப்பட்ட கற்பனைகளும், நியாயப் பிரமாணங்களும் எழுத்தால் இருக்கிறது. புதிய உடன்படிக்கையோ பரிசுத்த ஆவியானவரால் போதிக்கப்படுகிறது. பாவத்தை குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத் தீர்ப்பை குறித்தும் கண்டித்து உணர்த்துகிறார் (யோ16:8). பரிசுத்த ஆவியானவர் நியாயபிரமாணங்களை மனதிலே வைத்து இருதயத்தில் எழுதுகிறார். எழுத்தின் மூலமாக படித்து அறியாமலே போதிக்கப்படுகிறோம் (IIகொரி 3:6) (எபி 8:10). தேவசத்தத்தைக் கேட்பதில்லை. மனுஷ சத்தத்தையே இன்னமும் கேட்டுக் கொண்டு இருக்கிறீர்கள். உங்களுக்கு ஐயோ! ஆவியிலே ஆரம்பம் பண்ணின நீங்கள்

இப்படிமாம்சத்தினாலே முடிவு பெறப்போகிறீர்களோ, நீங்கள் இத்தனை புத்தியீனரா? இத்தனை பாடுகளையும் வீணாய்ப்பட்டீர்களோ? அவைகள் வீணாய்போயிற்றே (கலா3:3,4).

நன்மை செய்தல், நற்கிரியைகள் செய்தல் தேவ நீதியாகும். ஒருவன் நன்மை செய்ய திராணி இருக்கும் போது அதை செய்யாமல் போனால் அது அவனுக்குப் பாவமாய் இருக்கும் (நீதி 3:27) (யாக்4:17). உன்னிடத்தில் பொருள் இருக்கையில் உன் அயலானை நோக்கி, "நீ போய் திரும்ப வா நாளைக்கு தருவேன் என்று சொல்லாதே" (நீதி3:28). உன் சகோதரனில் எளியவன் இருக்கும் போது எளியவனாகிய உன் சகோதரனுக்கு (இஸ்ரவேலர்) உன் இருதயத்தை கடினமாக்காமலும், உன் கையை மூடாமலும் தாராளமாய் திறந்து அவனுடைய அவசரத்தின் நிமித்தம் அவனுக்குத் தேவையானதைக் கொடு (உபா 15:7,8) (I யோ3:17). இருதயத்தில் பேசுகிற, இதை உணர்த்துகிற, தேவ சத்தத்திற்குக் கீழ்ப்படி. பிள்ளையின் அப்பத்தை நாய் குட்டிகளுக்குப் போடாதே. பிள்ளைகள் முதலில் திருப்தியாகட்டும் (மத் 15:26). (பிள்ளைகள் – கர்த்தரின் பிள்ளைகள்).

கைமாறு கருதாமல் கடன் கொடுங்கள். உன்னதமானவருக்குப் பிள்ளைகளாய் இருப்பீர்கள். அவர் நன்றி அறியாதவர்களுக்கும் துரோகிகளுக்கும் நன்மை செய்கிறாரே (லூக்

6:35). உங்கள் நேரத்தை, திறமையை, உதவியை, உழைப்பை, ஞானத்தை, அறிவை, தேவ வல்லமையை, வரங்களை, அபிஷேகத்தை, பணத்தை, நீங்கள் கற்றுக் கொண்ட (தேவனிடத்தில்) பாடத்தை கொடுங்கள்.

நற்கிரியைகள் செய்வது தேவனுடைய நீதியாகும். நற்கிரியைகள் செய்வதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு இருக்கிறோம். (எபே 2:10). இயேசுவே திராட்சச் செடி. நாம் கொடிகள். நாம் அவரில் நிலைத்திருந்தால் மிகுந்த கனிகளை கொடுப்போம். அவரோடு இல்லாமல் நம்மால் ஒரு நன்மையும் செய்ய முடியாது (யோ 15:5). ஏனென்றால் ஒரு பாவமும் செய்யாமல் நன்மையே செய்யத்தக்க நீதிமான் பூமியில் இல்லை (பிர 7:20). நன்மை செய்கிறவன் இல்லை. ஒருவனாகிலும் இல்லை (சங் 53:3). அக்கிரமத்தின் கட்டுகளை அவிழ்க்கிறதும், நுகத்தடியின் பிணையல்களை நெகிழ்க்கிறதும், நெருக்கப்பட்டிருக்கிறவர்களை விடுதலையாக்கி விடுகிறதும், சகல நுகத்தடிகளையும் உடைத்துப்போடுகிறதும், பசியுள்ளவனுக்கு உன் ஆகாரத்தை பகிர்ந்து கொடுக்கிறதும், துரத்துண்ட சிறுமையானவர்களை வீட்டிலே சேர்த்துக் கொள்ளுகிறதும், வஸ்திரமில்லாதவனுக்கு வஸ்திரம் கொடுக்கிறதுமே ஆகிய இவைகளெல்லாம் நற்கிரியைக்கு அடையாளம் (ஏசா 58:6-7). மத்தேயு 25:34-40 வரை உள்ள வசனங்கள் நற்கிரியைகளை

குறித்துச் சொல்லுகின்றன. செம்மறி ஆடுகளைக் குறித்து சொல்லுகிறார். மிகச்சிறியவரான என் சகோதரருக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள் என்று சொல்கிறார்.

"ஆடுகளை ஓநாய்களுக்குள் அனுப்புகிறேன் (மத்10:16). பாம்பைப் போல் வினாவுள்ளவர்களாகவும், புறாவைப்போல் கபடற்றவர்களாகவும் இருங்கள். கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாய் இருங்கள். அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்திக் கொண்டு உங்களிடத்தில் வருவார்கள். உள்ளத்திலோ பட்சிக்கிற ஓநாய்கள்" (மத் 7:15). "மந்தையை தப்ப விடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும். உங்களில் சிலர் எழும்பி சீஷர்களை தங்களிடத்தில் இழுத்துக் கொள்ளும்படி மாறுபாடானவைகளை போதிப்பார்கள்" (அப் 20:29,30). ஓநாய்களுக்கு எச்சரிக்கையாய் இருங்கள். பரிசுத்த ஆவியானவரிடத்தில் விசாரியுங்கள். அநேகர் யோசுவாவைப் போல கர்த்தரிடத்தில் ஆலோசனையை கேட்காதபடி (விசாரிக்காமல்) வேண்டாதவர்களை ஏற்றுக் கொள்ளுகிறார்கள். யோசுவா 9 ஆம் அதிகாரத்தில் கர்த்தருடைய வார்த்தையைக் கேளாமல் கிபியோன் குடிகளை ஏற்றுக் கொள்ளுகிறான். பார்வைக்கு அவர்கள் பரிதாபமாய் காணப்பட்டதால் அப்படி செய்கிறான். இதன் விளைவு, கடைசி வரை துன்பத்தினை அனுபவித்தனர். ஆகவே விழிப்புள்ளவர்களாய் ஆவியானவருடைய ஆலோசனையை

எப்போதும் பெற்றுக் கொள்ள வேண்டும். இப்படியாக, தேவனுடைய நீதியை நன்கு கற்று அறிந்து, அதன் படி நடந்து, பின்பு போதிக்க வேண்டும். அப்பொழுது தான் பின்பற்றுகிறவர்களும் சரியான வழியில் நடப்பார்கள்.

நீதியின் பலிகள்

பலிசெலுத்துதல் தேவ நீதியாகும்.

நீதியின் பலிகளைச் செலுத்துங்கள் (சங் 4:5). நம்முடைய சரீரத்தைப் பலிபீடத்தில் வைக்க வேண்டும் (மல் 3:2-4). தேவன் நம்மைப் புடமிடுவதற்கு ஒப்புக் கொடுக்க வேண்டும். பொன்னைப்புடமிடுவது போலவும், வெள்ளியைப் புடமிடுவது போலவும் நம்மை களிம்பு நீங்க புடமிடுவார். அப்பொழுது நாம் அவருக்கு சுகந்த வாசனையாய் இருப்போம். லேவி கோத்திரத்தை புடமிடுவார். **அதுவே நீதியின் காணிக்கையாகும்.**

உங்கள் சரீரங்களை தேவனுக்குப் பிரியமான ஜீவபலியாக ஒப்புக் கொடுக்கப்பட வேண்டும். இதுவே புத்தியுள்ள ஆராதனை (ரோ 12:1-2). எந்த பலியும் உப்பினால் உப்பிடப்படுவது போல எந்த மனுஷனும் அக்கினியினால் உப்பிடப்படுவான் (மாற் 9:49). பின்பு நாம் நீதிபுரம் சத்திய நகரம் என்று பெயர் பெறுவோம். (ஏசா 1:25-26).

பலிபீடம் சென்ற பிறகு பிரசங்கபீடம் செல்வது நல்லது. பவுல் சொல்லுவது போல பிரசங்கிக்கிற நான் தான் ஆகாதவனாய்ப் போகாதபடி என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன் (Iகொரி9:27). நாமும் அதை கடைபிடிப்போம். பலி பீடத்தில் கழிவு நீக்கப்பட வேண்டிய காரியங்கள் அநேகம் உள்ளது. புடமிட்டுத்தான் கழிவு, கசடு நீக்கப்பட வேண்டும். பரிசுத்தம் பண்ணப்பட வேண்டிய இடம் பலிபீடம். அது அனைவருக்கும் தேவை. நான் பரிசுத்தர் ஆகையால் நீங்களும் பரிசுத்தராய் இருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். (I பேதுரு 1:16).

பரிசுத்தம் இல்லாமல் யாரும் தேவனை தரிசிக்க முடியாது. (மத் 5:8). அவருடைய பரிசுத்த கூடாரத்தில் தங்க முடியாது (சங்.15). பரிசுத்தம் காணப்பட நாம் சிட்சிக்கவும் படுகிறோம். கர்த்தருடைய சத்தத்தைக் கவனமாய்க் கேட்டு நடக்காத படியினால் சிட்சை வருகிறது. பரிசுத்தத்திற்குப் பங்குள்ளவர்களாகும்படி நம் பிரயோஜனத்திற்காக நம்மை சிட்சிக்கிறார் (எபி12:10).

தேவனுடைய கிரியைகளை நடப்பிக்கும் படியாக நாம் நியமிக்கப்பட்டு இருக்கிறோம். இயேசுவானவர் குறிப்பிட்டது போல் அவரை விசுவாசிக்கிறவன் அவர் செய்த கிரியைகளையும் செய்வான் (யோ 14:12). "என்னிடத்தில் விசுவாசமாய் இருக்கிறவன் எவனோ அவன் உள்ளத்திலிருந்து ஜீவ தண்ணீருள்ள நதிகள் ஓடும்." (யோவான் 7:38). "பரிசுத்த ஆவியானவரே ஜீவ தண்ணீர். அவர் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவன் தாகமடைய மாட்டான்".

"நான் அவனுக்கு கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாய் இருக்கும்". (யோ 4:14). இந்த நதி போகுமிடமெங்குமுள்ள யாவும் ஆரோக்கியப் பட்டுப் பிழைக்கும் (எசே 47:9). நதியோரங்களில், இக்கரையிலும், அக்கரையிலும், வெகு திரளான விருட்சங்கள் உண்டு (எசே 47:7). இந்த ஜீவ தண்ணீரைப் பெற்ற விசுவாசிகளால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளை துரத்துவார்கள்; நவமான பாஷைகளை பேசுவார்கள்; சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் உங்களை சேதப்படுத்தாது; வியாதியஸ்தர்கள் மேல் கைகளை வைப்பார்கள்; (ஜீவ தண்ணீர் புறப்பட்டு செல்லும்) அப்பொழுது அவர்கள் சொஸ்தமடைவார்கள். (மாற்.16:17-18).

தான தர்மம் செய்வதும் தேவனுக்கு பிரியமான பலிகள் (எபி 13;16). பகல் விருந்தாவது, இரவு விருந்தாவது பண்ணும்போது உன் சினேகிதரையாகிலும், உன் சகோதரர்களை யாகிலும் உன் பந்து ஜனங்களையாகிலும், ஐசுவரியமுள்ள அயலகத்தாரையும் அழைக்க வேண்டாம். நீ விருந்து பண்ணும் போது சப்பாணிகளையும், ஏழைகளையும், ஊனரையும், குருடரையும், அழைப்பாயாக. (லூக் 14: 12,13).

தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவி

தான். நொறுங்குண்டதும், நருங் குண்டதுமான இருதயத்தைப் புறக்கணியார் (சங்51:17). ஸ்தோத்திர பலிகளை செலுத்தி அவருடைய கிரியைகளை ஆனந்த சத்தத்தோடே விவரிப்பீர்களாக. (சங். 107:22). கர்த்தருடைய நாமத்தை துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலி அவர் மூலமாய் எப்பொழுதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம். (எபி 13:15).

நம்முடைய நீதியாய் இருக்கிற கர்த்தர் இயேசுவை எப்பொழும் தேடுவோம். அவருடைய நீதியை நடப்பிப்போம். அவர் நம்மை தமது நீதியின் பாதையில் நடத்துவார். அவருக்கு நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரத்தைப் படைப்போம். அவரைப் போல் நாம் மாறுவோம்.

கிறிஸ்துவின் பணியில்

Ps & Prophet D.Solomon

Mobile : 9341297734, 9382292249

உதவி

Bro. இமானுவேல் இளங்கோ

Mobile : 9940500264

For Free Copies
visit : www.jesusthetruth.net

EVANGELICAL LITERATURE SERVICE
133/1, ST. JOHN'S CHURCH ROAD
BANGALORE- 560 005.
PH : 25554034, 25542700

கர்த்தரின் புத்தகங்கள்

1. தேவநீதி
2. தேவ உடன்படிக்கைகள்
3. பரிசுத்த ஆவியின் வெகுவித்தியாசமான செயல்பாடுகள்
4. இயேசு பிறந்தாரா ?
5. God's Righteousness
6. The Lord Reigns
7. Diverse Manifestations of Holy Spirit
8. The Downfall of Pentecostals
9. Faith is Made Easy

For Free Copies
visit : www.jesusthetruth.net

ரூ.2/-